தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1969 பிப்ரவரி 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு **பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

(திரு. கே. ஆர். விசுவநாதன், முன்னாள் உறுப்பினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1952-லிருந்து 1962-வது ஆண்டுவரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. ஆர். விசுவநாதன் அவர்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் காலமானது குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

கவுண்டன்பாளையத்தில் வீடு கட்ட மனை ஒப்படைப்பு

* 25—வின. திரு சு. துரைசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை முன்னாள் இராணுவத்தினர், கோவை வட்டம், கவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் வீடுகள் கட்டிக்கொள்ள எந்த ஆண்டு விண்ணப்பித்தனர் ?

(இ) முன்னாள் இராணுவத்தினர் ஏற்கனவே விண்ணப்பித்திருந்தும் இந்நிலத்தை அரசாங்க ஊழியர்களுக்குப் பட்டா செய்து கொடுத்ததின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு கே. எ. மதியழகன் : (அ) கோயம்புத்தூர் வட்டம், கவுண்டம்பாளையம் கிராமத்தில் வீட்டு மனைகள் ஒப்படை செய்து தருமாறு வேண்டி முன்னாள் படை வீரர்களிடமிருந்து விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(இ) 1961-ம் ஆண்டிற்குப் பின்னர் அரசாங்கப் பணியாளர் எவருக்கும் அந்தக் கிராமத்தில் நிலம் ஒப்படைவு செய்யப்படவில்லை.